1981 மே 4]

பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் அளிக்கும் திட்டம்.

*வினா எண். 952.—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டமேற்படிப்பு படித்த பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு ஊதியம் அளிக்கவேண்டுமென அரசு உத்தர விட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

(இ) மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த உத்தரவு எப்படி அமுல் நடத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) அரசாணை எண். 42, கல்வி, நாள் 10—1—1969ல் வெளியிடப் பட்டுள்ள ஆணையின்படி உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் முதுகலைப்பட்டம் பெற்றால் இரண்டு ஊக்க ஊதிய உயர்வும், எம். எட். பயிற்சிப் பட்டம் பெற்றால் மேலும் இரண்டு ஊக்க ஊதிய உயர்வும் பெறுவர்.

(இ) மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தகுதி களாக முதுகலைப்பட்டத்துடன் பி. எட். பயிற்சிப் பட்டம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, இக்கல்வித் தகுதி மட்டும் பெற்ற மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் அளிப்பதற்கில்லை. எம். எட். பயிற்சி பட்டம் பெற்றிருந்தால் அவர்களுக்கு ஊக்க ஊதியம் அளிப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, இந்த பட்ட மேல்படிப்புத் படித்த பள்ளி ஆசிரியர்கள் ஒரு குறிப்பிட்ட பாடத்தை எடுக்க வரும்போது, அந்த ஊக்குவிப்பு எந்த அடிப்படையில் அளிக்கப்படுகிறது? அதிக ஊதியம் கொடுப்பதால் எனக்கு, உனக்கு என்ற போட்டி வரும்போது ஒரே தகுதி பெற்ற இருவர் இருந்தால் அவர்களில் யாருக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரே தகுதி பெற்றவர் களாக இருந்தால் அவர்களுடைய அனுபவத்தை அடிப்படையாக வைத்து அந்த வாய்ப்பு தரப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, அவர்கள் எம்.ஏ. பட்டம் பெற்ற அந்த ஆண்டுகளைக் கணக்கிட்டு அதன் அடிப்படையிலேயா அல்லது அந்தப் பள்ளியிலே சேர்ந்து அவர்கள் பணியாற்றிய வகையில் அவர்களுடைய சர்வீஸ் களின் அடிப்படையிலேயா இவ்வாறு முன்னுரிமை வழங்கப்படு கின்றது? அல்லது அவர்கள் பி.ஏ. பாடத்திலே படித்த பாடத் தின் அடிப்படையிலே முன்னுரிமை வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விதிகளை நான்கைந்து நாட்களுக்கு முன்புதான் வெளியிட்டிருக்கிறோம். இப்போது அது என்னிடத்திலே இல்லை. ஆகவே தனியாகக் கேள்வி கேளுங்கள்.

தமிழ் நாட்டு வரலாற்று நூல் வெளியிடும் திட்டம்

*வினா எண். 953.—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ் நாட்டு வரலாற்று நூல் வெளியிட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தமிழ் நாட்டு வரலாற்று நூல் வெளியிடுவதற்காகத் தற்போது டாக்டர் கே. கே. பிள்ளை அவர்கள் தலைமையில் குழு ஒன்று இயங்கி வருகிறது. தமிழ் நாட்டு வரலாற்றின் முதல் தொகுதியாக "தொல் பழங்காலம்" என்னும் நூல் முன்னரே வெளியிடப் பட்டுள்ளது. இரண்டாம் தொகுதி "சங்ககாலம் (அரசியல்), சங்ககாலம் (வாழ்வியல்)" ஆகிய இரண்டு பாகங்கள் எழுதி முடிக்கப்பட்டு அச்சிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மூன்றாவது, நான்காவது தொகுதிகளாக முறையே "பல்லவர்- பாண்டியர் காலம்" "சோழர் காலம்" என்னும் தலைப்புகளில் பெரும் பகுதி எழுதி முடிக்கப்பட்டுக் கட்டுரைகள் குழுவின் ஆய்வில் இருந்து வருகின்றன.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுக் குழுவிலே வெறும் வரலாற்றுத் துறையைச் சேர்ந்த பெரியவர்கள் மட்டும் தான் இருக்கிறார்களா? அல்லது தமிழ் அறிவு பெற்ற அறிஞர்களும் இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, டாக்டர். தா. தா. திருநாவுக்கரசு போன்ற தமிழ் அறிஞர்களும் அதிலே இருக்கிறார்கள்.